**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண். 88 /2013**

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ம் நாள் திங்கட் கிழமை வாதி/ பிரதிவாதி சாட்சியாகிய இவ்வாக்குமூலம் ஆக்ட் 10/1873ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.த.ஷோபனா, உதவியாளர் என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையிலும் நேரடி கவனத்திலும் கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சையத் ஜலால் | தொழில் | : |
| தந்தை பெயர் | : சையத் ஷெரீப் | ஜாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : |

**நீ.ம.சா.2 முதல் விசாரணை**

1. நான் திருவண்ணாமலை நில அளவையர் அலுவலகத்தில் வட்ட துணை ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கு சமயத்தில் நான் ஆரணி நகர நில அளவையராக பணியாற்றி வந்தேன். நான் இன்று இந்நீதிமன்ற அழைப்பாணை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் நீ.ம.சா.ஆ.3 வரைபடம் நான் வழங்கியது ஆகும். நீ.ம.சா.ஆ.3 வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள இடம் சத்தியமூர்த்தி ரோட்டில் வடக்கு புறம் உள்ளது. வழக்கறிஞர் ஆணையர் திரு. ரமேஷ் என்பவரின் வேண்டுகோள் கடிதத்தின்படி நான் இடத்தை அளந்து நீ.ம.சா.ஆ.3 வரைபடம் வழங்கி உள்ளேன்.

2. எனக்கு வழங்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்தில் எந்த இடத்தை அளக்க வேண்டும் என்று குறிப்பிட்டு இருந்ததால் அந்த இடத்தை அளந்து தான் நீ.ம.சா.ஆ.2 வரைபடம் வழங்கினேன். நான் டி.எஸ்.நெ.135/1 மற்றும் டி எஸ்.140 ஆகிய இடங்களை அளந்தேன். நான் நீ.ம.சா.ஆ.3 வரைபடத்துடன் டவுன் எக்ஸ்டிராக்ட் ரிஜிஸ்டர் நீ.ம.சா. ஆ.4 வழங்கி உள்ளேன். நீ.ம.சா.ஆ.4 டவுன் எஸ்ட்ராக்ட் ரிஜிஸ்டர் படி டவுன் சர்வே எண் 135/1 - 786 சதுர மீட்டர் ஆகும்.

3. நீ.ம.சா.ஆ.4 டவுன் எக்ஸ்டராக்ட் ரிஜிஸ்டரில் டவுன் சர்வே எண்.135/1 கோவிந்தசாமி நாய்க்கர் மகன் ராமகிருஜ்ணன் என்பவர் பெயரில் துலங்குகிறது.

டவுன் சர்வே எண்.140 ன் விஸ்தீரணம் 136.5 சதுர மீட்டர் ஆகும். நீ.ம.சா.ஆ.4 டவுன் எகஸ்டிராக்ட் ரிஜ்ஸ்டர்படி டவுன் சர்வே எண்.140 ஜெயராமநாயுடு மகன் சுந்தரமூர்த்தி என்பவரின் பெயரில் துலங்குகிறது. டவுன் சர்வே எண்.135/1ன் கதவு எண்.44 மற்றும் கதவு எண்.41 ஆகும். டவுன் சர்வே எண்.140ல் வீடு எதுவும் இல்லை. சுற்றுசுவர் மட்டும் தான் இருந்தது அதனால் கதவு எதுவும் இல்லை. அது காலிமனை என நீ.ம.சா.ஆ.4 டவுன் சர்வே எக்ஸ்ட்ராக்டில் உள்ளது.

4. நீ.ம.சா.ஆ. 3 எனது வரைபடத்தில் சிவப்பு நிறம் இட்ட இடமானது டவுன் சர்வே எண் 135/1ல் வருகிறது. அதன் விஸ்தீரணம் 786 சதுர மீட்டர் ஆகும். அது கோவிந்தசாமி நாய்க்கர் மகன் ராமகிருஷ்ணன் என்பவர் பெயரில் உள்ளது. நீ.ம.சா.ஆ.3 வரைபடத்தில் நீல நிறமிட்ட இடமானது டவுன் சர்வே எண் 140 வருகிறது. அதன் விஸ்தீரணம் 136.05 சதுர மீட்டர் ஆகும். அது ஜெயராமநாயுடு மகன் சுந்தரமூர்த்தி என்பவர் பெயரில் உள்ளது.

5. நான் இடத்தை அளக்கும் போது இரண்டு வழக்கறிஞர்கள் மற்றும் நீதிமன்ற ஆணையர் ஆகியோர் இருந்தார்கள் அவர்கள் முன்னிலையில் நான் இடத்தை அளந்தேன். வாரண்டில் சொல்லி உள்ள இரண்டு ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் ஆவணத்தை நான் பார்க்கவில்லை. நான் சர்வே எக்ஸ்டரர்க்ட் படி அளந்து காண்பித்தேன். நீதிமன்ற ஆணையர் பத்திரத்தை பார்த்து அதன்படி என்னை அளக்க சொன்னார். அதன்படி நான் அளந்து காண்பித்தேன். நான் நீ.ம.சா.ஆ.3 மற்றும் நீ.ம.சா.ஆ.4 ஆகியவற்றை நான் நீதிமன்ற ஆணையரிடம் ஒப்படைத்துவிட்டேன். நீதிமன்ற ஆணையர் என்ன அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

6. நீதிமன்ற ஆணையர் மற்றும் வழக்கறிஞர்கள் இடத்தில் பிரச்சனை இருக்கிறது என்று கூறி எதுவும் அளக்க சொல்லவில்லை அவர்களுக்கு எந்த சந்தேகமும் வரவில்லை. நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் பச்சை நிறமிட்ட இடம் டவுன் சர்வே எண்.135/1ல் வருகிறது என குறிப்பிட்டுவிட்டு அவரது அறிக்கையில் மேற்படி பச்சை நிறமிட்ட இடம் யார் பெயரிலும் வரவில்லை என்று குறிபிட்டுள்ளார் அதுபோல் நான் ஏதேனும் அளந்து காண்பித்தேனா என்றால் இல்லை.

7. யார் பெயருக்கும் வராத பச்சை நிறமிடப்பட்ட இடம் எனது வரைபடத்தில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை. நீ..சா.ஆ.2 பச்சைநிறமிட்ட இடம் பற்றி நீதிமன்ற ஆணையர் என்னிடம் ஏதேனும் கேட்டாரா என்றால் கேட்கவில்லை. பச்சை நிறமிட்ட இடமும் ராமகிருஷ்ணன் பெயரில் வருகிறது என்று தான் டவுன் சர்வே எக்ஸ்டராக்ட் படி அளந்து காண்பித்தேன்.

8. எனது நீ.ம.சா.ஆ.3 வரைபடத்தில் டவுன் சர்வே எண்.140க்கு தெற்மேற்கில் டவுன் எக்ஸ்டராக்ட் ரஜிஸ்டர் படி டவுன் சர்வே எண் 135/1ல் வருகிறது அது ராமகிருஷ்ணன் பெயரில் வருகிறது. நான் இரண்டு வழக்கறிஞர்கள் மற்றும் வழக்கறிஞர் ஆணையர் கேட்டு கொண்டதின்பேரில் தான் ஆவணத்தில் சொல்லி உள்ள ஐக்பந்தி அளவுகள் மற்றும் டவுன் எக்ஸ்டராக்ட் ரிஜிஸ்டரில் சொல்லி உள்ள அளவுகள் படி அளந்து காண்பித்தேன். அதன்படி தான் நீ.ம.சா.ஆ.3 மற்றும் நீ.ம.சா.ஆ.4 வழங்கினேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல
என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால்
திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால்
சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால்
சாட்சியின் கையெழுத்து.கைரேகை பெறப்பட்டது.

(ஒம்) பொ.தி. சதீஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆரணி.